நேரம்: 3.00 மணி

# தமிழ்

மதிப்பெண்கள்: 90

## பகுதி - I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

பலவுள் தெரிக : 14×1=14

1. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது

உ) பொதிகையில் தோன்றியது ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

2. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

3. <u>பொய்யாவானம்</u> புதுப்பெயல் பொழிந்தென - தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு தருக.

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்

இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

4. உவா உற வந்து கூடும்

உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

5. முதல் குழந்தை பிறக்கும் வரை உள்ள காலகட்டத்தைக் குறிக்கும் நிலை

அ) மருமகள் தாய முறை ஆ) புக்கில் இ) தன்மனை ஈ) மணந்தகம்

6. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க:

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு

இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

7. "மோட்டார் வாகனச் சட்டம்" இயற்றப்பட்ட ஆண்டு

அ) 2016 ஆ) 2018 இ) 2017 ஈ) 2019

8. *பொருத்துக :*

1. மாச்சீர் - i) கருவிளம், கூவிளம்
2. காய்ச்சீர் - ii) நாள், மலர்
3. விளச்சீர் - iii) தேமாங்காய், புளிமாங்காய்
4. ஓரசைச்சீர் - iv) தேமா, புளிமா

அ) 1 - (ii), 2 - (iii), 3 - (i), 4 - (iv) ஆ) 1 - (i), 2 - (ii), 3 - (iv), 4 - (iii)

இ) 1 - (iii), 2 - (iv), 3 - (ii), 4 - (i) ஈ) 1 - (iv), 2 - (iii), 3 - (i), 4 - (ii)

9. வையகமும் வானகமும் ஆற்றல் அரிது - எதற்கு?

அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்தி உதவி

இ) திணைத் துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி

10. 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் ............ பயின்று வந்துள்ளது.
அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

11. "உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு
அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப்பண்பு
இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்

12. தோப்பில் முகமது மீரான் எழுதி சாகித்திய அகாதெமி விருது பெற்ற புதினம்
அ) கூனன் தோப்பு ஆ) சாய்வு நாற்காலி இ) துறைமுகம் ஈ) குட்டித்தீவு

13. சடாயு உயிர்நீத்த படலம்
அ) அயோத்தியா காண்டம் ஆ) சுந்தர காண்டம் இ) ஆரணிய காண்டம்
ஈ) கிட்கிந்தா காண்டம்

14. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

## பகுதி - II

### *பிரிவு - 1*

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×2=6**

15. சூரிய ஒளி பட்டவுடன் நகரம் எவ்வாறு மாறியதாக அய்யப்ப மாதவன் குறிப்பிடுகிறார்?
16. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
17. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யார்க்கு?
18. அகநானூறு எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?

### *பிரிவு - 2*

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×2=4**

19. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.
20. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
21. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

### *பிரிவு - 3*

**குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** **7×2=14**

22. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:*
அ) பூம்பாவாய் ஆ) எத்திசை

23. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:*
அ) நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்
ஆ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்

24. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:*
அ) பலகை ஆ) தலைமை

25. *தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக:*
அ) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.
ஆ) ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.

26. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இரு வேறு தொடர்களை அமைக்க:

தானே <

27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:
அ) உயர்ந்தோர் ஆ) பேசுவார்

28. கலைச்சொல்லாக்கம் தருக :
அ) Arrival ஆ) Passport

29. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக:
அ) தாமரை இலை நீர்போல ஆ) எலியும் பூனையும் போல

30. திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் - இவற்றின் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

## பகுதி - III

### *பிரிவு - 1*

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2×4=8

31. "ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

32. நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து
உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள் - இக்கவிதையின் அடி 'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.

33. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.

34. 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.

### *பிரிவு - 2*

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடதக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

36. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

37. சென்னை நகரின் போக்குவரத்து வளர்ச்சி குறித்து எழுதுக.

38. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

### *பிரிவு - 3*

**குறிப்பு : எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக:** 3×4=12

39. ஏகதேச உருவக அணி **(அல்லது)** நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. *இலக்கிய நயம் பாராட்டுக:*
*(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)*

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக் கவி பாரதி ஓர் ஆசான் திண்ணம்

- நாமக்கல் கவிஞர்

41. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) கூதிர்ப்பாசறை துறையைச் சான்றுடன் விளக்குக.

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) யானைக்கும் அடிசறுக்கும்

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

43. தமிழாக்கம் தருக:

1. Learning is a treasure that will follow its.
2. A new Language is a new life.
3. Knowledge of Languages is the doorway to wisdom.
4. The limits of my Language are the limits of my world.

## பகுதி - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கும் மிகாமல் விடையளிக்கவும்:

3×6=18

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்து மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

(அல்லது)

ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) "சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு" - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

(அல்லது)

ஆ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

## பகுதி - V

குறிப்பு : அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: 4+2=6

47. அ) "துன்பு உளது .........." எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'மிகும்' என முடியும் குறள்

----------